Copy 1/2

**சுருக்கம்**

நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை – நிதி ஒதுக்கீடு – நில எடுப்பு – திருவள்ளூர் மாவட்டம் – திருவள்ளூர் நகருக்கு புறவழிச்சாலை அமைக்க நில எடுப்பு செய்ய அரசு நிர்வாக அனுமதி மற்றும் நில எடுப்பு செய்ய புதிய அலகுகள் ஏற்படுத்தப்பட்டது – சம்பள கணக்கு தலைப்பு மற்றும் கூடுதல் நிதி ஒதுக்கீடு கோருதல் – ஆணை – வெளியிடப்படுகிறது.

---

**நெடுஞ்சாலை (ம) சிறு துறைமுகங்கள் (எச்.டபிள்யு.1) துறை**

**அரசாணை (நிலை) எண். 95** **நாள்: 21.10.2021**

**பிலவ, ஐப்பசி –4, திருவள்ளுவராண்டு 2052**

**படிக்கவும்:**

1. அரசாணை (நிலை) எண்.50, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் (எச்.டபிள்யு 1) துறை, நாள் 25.02.2021
2. இணை ஆணையர் (நிஎ) மற்றும் கூடுதல் ஆணையர் (மு.கூ.பொ), நில நிர்வாக ஆணையரகம் அவர்களின் கடித எண். N3/1195441/2021, நாள் 11.06.2021
3. தலைமைப் பொறியாளர் (நெ), திட்டங்கள் அவர்களின் கடித எண்.2458/ நிறு–1/2021, நாள் 20.07.2021

---

**ஆணை:**

மேலே முதலாவதாக படிக்கப்பட்ட அரசாணையில், திருவள்ளூர் மாவட்டம், திருவள்ளூர் நகருக்கு புறவழிச்சாலை அமைக்கும் பணிக்கு நில எடுப்பு செய்வதற்காக 7 பணியாளர்கள் கொண்ட ஒரு நிலஎடுப்பு அலகினை ஏற்படுத்தவும், அப்பணியிடங்களில் துணை வட்டாட்சியர் பணியிடம் தவிர மீதமுள்ள 6 பணியிடங்களை ஓய்வு பெற்ற பணியாளர்கள் அல்லது வெளியாட்களை கொண்டு பணியமர்த்தவும் அரசு ஆணையிட்டுள்ளது. மேலும், அப்பணியாளர்களுக்கு (துணை வட்டாட்சியர் தவிர) ஊதியம் வழங்குவதற்காக ஓராண்டிற்கு ரூ.10,80,000/–ம் மற்றும் துணை வட்டாட்சியர் பணியிடத்திற்கான ஊதியம் வழங்குவதற்காக ஓராண்டிற்கு ரூ.5,72,076/–ம் அலுவலக செலவினங்களுக்காக ரூ.9,70,000/–ம் சேர்த்து ஆக மொத்தம் ரூ.26,22,076/–க்கு நிதி ஒப்பளிப்பினை வழங்கி அரசு ஆணையிட்டுள்ளது

2. மேலே பார்வை இரண்டில் படிக்கப்பட்டுள்ள கடிதத்தில் இணை ஆணையர் (நிஎ) மற்றும் கூடுதல் ஆணையர் (மு.கூ.பொ), நில நிர்வாக ஆணையரகம் அவர்கள் மாவட்ட வருவாய் அலுவலர், திருவள்ளூர் அவர்களிடமிருந்து பெறப்பட்டுள்ள கருத்துருவில் மேற்படி நில எடுப்பு அலகில் துணை வட்டாட்சியர் 30.04.2021ல் பணியில் சேர்ந்துள்ளதாகவும், 2020-2021ம் நிதியாண்டில் அரசாணை (நிலை) எண் 50, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் (எச்.டபிள்யு.1) துறை, நாள் 25.02.2021-ல் ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதியினை 2020-2021 ஆம் ஆண்டில் ஏதும் பயன்படுத்த இயலவில்லை என மாவட்ட வருவாய் அலுவலர், திருவள்ளூர் தெரிவித்துள்ளார். மேலும், மேற்படி நில எடுப்பு அலகுகளின் பணியமைப்பு செலவினங்களுக்காக 2021-2022ம் நிதியாண்டிற்கான நிதி ஒதுக்கீட்டினை கீழ்க்கண்டவாறு பெற்று வழங்குமாறு கோரியுள்ளார்.

| வ. எண். | கணக்குத் தலைப்பு | 2021-2022ம் நிதியாண்டிற்காக தேவைப்படும் நிதி ஒதுக்கீடு (ஆயிரத்தில்) |
|---|---|---|
| 1. | ஊதியம் | 504 |
| 2. | மருத்துவப்படி | 4 |
| 3. | இதர படிகள் | 16 |
| 4. | வீட்டு வாடகைப்படி | 50 |
| 5. | நகர ஈட்டுப்படி | 10 |
| 6. | பயணச்சலுகை | 20 |
| 7. | அகவிலைப்படி | 88 |
| 8. | சுற்று பயணப்படி | 60 |
| 9. | நிலையான பயணப்படி | 10 |
| 10. | இதர செலவினம் | 50 |
| 11. | மரத்தளவாடங்கடள வாங்குதல் | 120 |
| 12. | வாடகை | 240 |
| 13. | வாகனம் வாடகைக் கட்டணம் | 300 |
| 14. | ஒப்பந்தப் பணியாளர்கள் ஊதியம் | 1080 |
| 15. | இயந்திரம் வாங்குதல் | 100 |
| 16. | கணினி வாங்குதல் | 50 |
| 17. | கணினி எழுதுபொருட்கள் | 50 |
| | மொத்தம் | 2750 |

3. மேலே பார்வை மூன்றில் படிக்கப்பட்ட கடிதத்தில் தலைமைப் பொறியாளர் (நெ), திட்டங்கள் அவர்கள் இணை ஆணையர் (நிஎ) மற்றும் கூடுதல் ஆணையர் (மு.கூ.பொ) நில நிர்வாக ஆணையரகம் மற்றும் மாவட்ட வருவாய் அலுவலர், திருவள்ளூர் அவர்களிடமிருந்து பெறப்பட்ட முன்மொழினை ஆய்வு செய்து, திருவள்ளூர் மாவட்டம், திருவள்ளூர் நகருக்கு புறவழிச்சாலை அமைக்கும் பணிக்கு நில எடுப்பு பணிகளை மேற்கொள்ள தோற்றுவிக்கப்பட்ட தனி அலகானது 30.04.2021ல் தோற்றுவிக்கப்பட்டு செயல்பட்டு வருவதாலும், மேற்படி பணிக்காக 2020–2021ம் நிதியாண்டிற்காக வழங்கப்பட்ட நிதி ஒதுக்கீட்டினை அரசுக்கு ஒப்பளிப்பு செய்துள்ளதாலும், மேற்காணும் நில எடுப்பு அலகில் பணிபுரியும் பணியாளர்களின் ஊதியம், படிகள் மற்றும் பிற நிருவாக செலவினங்களுக்காக 2053 00 0094 EL என்ற கணக்குத் தலைப்பின்கீழ் 2021–2022ம் நிதி ஆண்டிற்கான நிதி ரூ.27.50 இலட்சம் வழங்குமாறு அரசைக் கோரியுள்ளார்.

4. தலைமைப் பொறியாளர் (நெ), திட்டங்கள் அவர்களின் கருத்துருவினை அரசு கவனமாக பரிசீலனை செய்து திருவள்ளூர் மாவட்டம், திருவள்ளூர் நகருக்கு புறவழிச்சாலை அமைக்கும் பணிக்கு நில எடுப்பு பணிகளை மேற்கொள்ள தோற்றுவிக்கப்பட்ட தனி அலகானது 30.04.2021ல் தோற்றுவிக்கப்பட்டு செயல்பட்டு வருவதாலும், மேற்படி பணிக்காக 2020–2021ம் நிதியாண்டிற்காக வழங்கப்பட்ட நிதி ஒதுக்கீட்டினை அரசுக்கு ஒப்பளிப்பு செய்துள்ளதாலும், மேற்காணும் நில எடுப்பு அலகில் பணிபுரியும் பணியாளர்களின் ஊதியம், படிகள் மற்றும் பிற நிருவாக செலவினங்களுக்காக 2053 00 0094 EL என்ற கணக்குத் தலைப்பின்கீழ் 2021–2022ம் நிதி ஆண்டிற்கான நிதி ஒதுக்கீட்டின் கீழ் ரூ.25,90,000/– (ரூபாய் இருப்பத்தைந்து இலட்சத்து தொண்ணூறு ஆயிரம் மட்டும்) கீழ்க்கண்டவாறு நிதி ஒதுக்கீடு செய்து அரசு ஆணையிடுகிறது.

| வ. எண். | கணக்குத் தலைப்பு | ஒப்பளிக்கப்படும் நிதி | கணக்கீடு |
|---|---|---|---|
| | (ரூபாய் ஆயிரத்தில்) | | |
| 1 | ஊதியம் (301.01) | 504 | ரூ.42,000X12= 5,04,000 |
| 2 | மருத்துவப்படி (301.02) | 4 | ரூ.300X12= 3600 |
| 3 | ஏனைய படிகள் (301.04) | 16 | ரூ.1,300X12= 15,600 |
| 4 | வீட்டுவாடகைப்படி (301.06) | 50 | ரூ.4,200X12= 50,400 |
| 5 | நகரஈட்டுப்படி (301.08) | 10 | ரூ.800X12= 9600 |
| 6. | பயணச்சலுகை (301.07.TC) | 0 | - |
| 7. | அகவிலைப்படி (303.01) | 86 | ரூ.42,000X17%X12= 85,680 |
| 8. | சுற்று பயணப்படி(304.01) | 60 | |

| | | | |
|---|---|---|---|
| 9. | நிலையான பயணப்படி (304.03. Fixed TA) | 0 | - |
| 10. | இதர செலவினம் (305.02. Other Contingencies) | 50 | |
| 11. | மரத்தளவாடங்கள் வாங்குதல் (305.05. Furniture) | 80 | |
| 12. | வாடகை (306.01) | 240 | |
| 13. | வாகனம் வாடகை கட்டணம் (321.03) | 300 | |
| 14. | ஒப்பந்தப் பணியாளர்கள் ஊதியம் (333.04) | 1080 | |
| 15. | இயந்திரம் வாங்குதல் (319.01) | 50 | |
| 16. | கணினி வாங்குதல் (376.01) | 30 | |
| 17. | கணினி எழுதுபொருட்கள் (376.03) | 30 | |
| | மொத்தம் | 2590 | |

5. மேலே பத்தி 4-ல் ஒப்பளிக்கப்பட்ட பணியிடங்களுக்கான செலவினம் கீழ்க்காணும் கணக்குத் தலைப்பின் கீழ் பற்று வைக்கப்பட வேண்டும்:-

"2053-00. மாவட்ட நிருவாகம் - 094. ஏனைய பணியாளரமைப்பு - மாநிலச் செலவினங்கள் -EL. புறவழிச்சாலை அமைப்பதற்கான பணிக்கு நிலம் கையகப்படுத்துவதற்கான பணியாளரமைப்பு.

301. 01 சம்பளங்கள் - அடிப்படைச் சம்பளம்
(IFHRMS த.தொ.கு: 2053-00-094-EL-30101)

= ரூ.5,04,000/-

301. 02 சம்பளங்கள் - மருத்துவப்படி
(IFHRMS த.தொ.கு: 2053-00-094-EL-30102)

= ரூ.4,000/-

301. 04 சம்பளங்கள் - ஏனையபடிகள்
(IFHRMS த.தொ.கு: 2053-00-094-EL-30104)

= ரூ.16,000/-

301. 06 சம்பளங்கள் - வீட்டு வாடகைப்படி
(IFHRMS த.தொ.கு: 2053-00-094-EL-30106)

= ரூ.50,000/-

301. 08 சம்பளங்கள் –நகர ஈட்டுப்படி
(IFHRMS த.தொ.கு: 2053-00-094-EL-30108)

= ரூ.10,000/-

303. அகவிலைப்படி –01.அகவிலைப்படி
(IFHRMS த.தொ.கு: 2053-00-094-EL-30301)

= ரூ.86,000/-

304. பயணச் செலவுகள் – 01. சுற்றுப் பயணப்படிகள்
(IFHRMS த.தொ.கு: 2053-00-094-EL-30401)

= ரூ.60,000/-

305. அலுவலகச் செலவுகள் – 02.ஏனைய சில்லறைச் செலவுகள்
(IFHRMS த.தொ.கு: 2053-00-094-EL-30502)

= ரூ.50,000/-

305. அலுவலகச் செலவுகள் – 05.அறைகலன்கள்
(IFHRMS த.தொ.கு: 2053-00-094-EL-30505)

= ரூ.80,000/-

306. வாடகை, கட்டண வீதங்கள், வரிகள் –01.வாடகை
(IFHRMS த.தொ.கு: 2053-00-094-EL-30601)

= ரூ.2,40,000/-

319. இயந்திரமும் சாதனமும் – 01.வாங்குதல்
(IFHRMS த.தொ.கு: 2053-00-094-EL-31901)

= ரூ.50,000/-

321. மோட்டார் வண்டிகள் – 03. வாடகை கட்டணங்கள்
(IFHRMS த.தொ.கு: 2053-00-094-EL-32103)

= ரூ.3,00,000/-

333. தொழில்முறை, சிறப்புப் பணிகளுக்குத் தொகை கொடுத்தல்
04.ஒப்பந்த ஊதியம்
(IFHRMS த.தொ.கு: 2053-00-094-EL-33304)

= ரூ.10,80,000/-

376. கணினியும் துணைப் பாகங்களும் –01.வாங்குதல்
(IFHRMS த.தொ.கு: 2053-00-094-EL-37601)

= ரூ.30,000/-

376. கணினியும் துணைப் பாகங்களும் –03.எழுதுபொருள்
(IFHRMS த.தொ.கு: 2053-00-094-EL-37603)

= ரூ.30,000/-

6. மேலே பத்தி 4-ல் ஒப்பளிக்கப்பட்டுள்ள செலவினத்தை மேற்கொள்ள தேவையான நிதியொதுக்கம் ரூ.25,90,000/- வரும் 2021-2022 திருத்திய மதிப்பீடு (RE) / இறுதி திருத்த நிதியொதுக்கத்தில் (FMA) வழங்கப்படும். இருப்பினும், மேற்கண்ட செலவினத்திற்கு 2021-22 ஆம் நிதியாண்டிற்கான துணை மானிய கோரிக்கைகளில் கொணர்ந்து சட்ட மன்றப் பேரவையின் ஒப்புதல் பின்னர் பெறப்படும். இந்நிதியொதுக்கம் வழங்குவதை எதிர்நோக்கி இச்செலவினத்தை மேற்கொள்வதற்கு ஏதுவாக இணை ஆணையர் (நிஎ) மற்றும் கூடுதல் ஆணையர் (மு.கூ.பொ), நில நிர்வாக ஆணையரகம் அவர்கள் பெற்று வழங்குவதற்கு அதிகாரம் அளித்து ஆணையிடப்படுகின்றது. மேலும் 2021-2022 திருத்திய மதிப்பீடு (RE) / இறுதி திருத்த நிதியொதுக்க (FMA) கருத்துருவை நிதித் (வ.செ.பொ / பொ.ப.1) துறைக்கு அனுப்பிடும் பொழுது மேற்காணும் செலவினத்தை தவறாமல் அனுப்பிடுமாறு இணை ஆணையர் (நிஎ) மற்றும் கூடுதல் ஆணையர் (மு.கூ.பொ), நில நிர்வாக ஆணையரகம் அவர்கள் அறிவுறுத்தப்படுகிறார்.

7. இவ்வரசாணை நிதித்துறையின் அ.சா.எண்.42908/PW-I/2021, நாள் 19.10.2021-ன்படி வெளியிடப்படுகிறது. கூடுதல் நிதியொதுக்கப் பேரேடு எண்.622 (அறுநூற்று இருபத்திரண்டு)

**(ஆளுநரின் ஆணைப்படி)**

**தீரஜ் குமார்**
**அரசு முதன்மைச் செயலாளர்**

**பெறுநர்**
நில நிர்வாக ஆணையர், நில நிர்வாக ஆணையரகம் ,சேப்பாக்கம், சென்னை-5
தலைமைப் பொறியாளர் (நெ), திட்டங்கள், சென்னை-25
மாவட்ட வருவாய் அலுவலர், திருவள்ளூர்
மாநில கணக்காயர், சென்னை-18
மாவட்ட கருவூல அலுவலர், திருவள்ளூர்
**நகல்:**
முதன்மைச் செயலாளர் அவர்களின் தனிச் செயலர்,
நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை, சென்னை-9
நிதி (பொ.ப 1) / வருவாய் (ம) பேரிடர் மேலாண்மை (வ.செ.பொ.2) துறைகள்,
சென்னை-9
கோ.எண்.6964/எச்.டபிள்யு1/2021
இ.கோ / உதிரி நகல்

**// ஆணைப்படி அனுப்பப்படுகிறது//**

**பிரிவு அலுவலர்**